
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25   இதழ் - 3   மார்ச் 2012

தனிப் பிரதி ரூ. 9/-



## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

❊ திருமறை ஆசான் இதழை தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களுக்கு இதழ் நிறுத்தப்படும்.

❊ இந்த பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.

❊ திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

## திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை | TV | ஞாயிறு | காலை | 5:30 – 6.00 |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7.00 – 7.15 |
| தமிழன் | TV | சனி | காலை | 7.15 – 7.30 |

இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து உண்மை சத்தியத்தை அறிந்து கீழ்ப்படியுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1 . ஆசிரியர் உரை ............ 1
2 . ஏன் நாங்கள் நரகம் இருக்கிறதாக நம்புகிறோம்? ............ 10
3 . நிழலும், நிஜமும் ............ 15
4 . பெண்கள் பகுதி ............ 19
5 . வாலிபர் பகுதி ............ 22
6 . சிறுவர் பகுதி ............ 25
7 . வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ............ 27
8 . கர்த்தருடைய சேனை ............ 30


✣ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

✣ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

✣ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

✣ M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.

✣ அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 25** **MARCH 2012** **Issue - 3**


ஆசிரியர் உரை

# கெத்செமனே தோட்டம்

தோட்டம் என்ற சொல்லைக் கேட்பதும், ஓர் அழகிய தோட்டத்தைப் பார்ப்பதும் எல்லோருக்கும் பிடித்தமானதாகவே இருக்கும். ஏனெனில், ஒரு தோட்டம் என்பது செழிப்பு, வனப்பு, பசுமை, குளுமை, அழகு ஆகிய இச்சிறப்பு வார்த்தைகள் அனைத்திற்கும் சொந்தமான இடம். தங்களுக்கென்று ஒரு தோட்டம் இல்லாதவர்கள் கூட, ஏதாவது ஒரு தோட்டத்துப் பக்கம் போக வாய்ப்புக் கிடைத்தால் அதனருகிலோ அல்லது அதனுள்ளேயோ சென்று அதன் அழகை ரசிக்கத் தவற மாட்டார் கள். அவ்வளவு ஏன், நம்முடைய பரலோகத்தின் தேவனே ஒரு தோட்டம் விரும்பியாகவே இருந்துள்ளார் என்று தெரி[illegible]. எப்படியெனில், தம்முடைய அதீத வல்லமையினால், ஆதிய[illegible] ஆதாமையும், ஏவாளையும் படைத்து, அவர்களை ஓர் அ[illegible] தோட்டத்திலே தான் குடியமர்த்தினார் (ஆதி. 2:8). ஆம், அ[illegible]ர் களுக்காக ஒரு வீட்டைக்கட்டி நான்கு சுவர்களுக்குள்ள[illegible]க அடைக்காமல், அவர்களது கண்களுக்கும், மனதுக்கும், ஏன் வயிற்றுக்கும் விருந்தளிக்கும்படியாய் ஒரு தோட்டத்திலே தான் வைத்தார். அதினால் தான் என்னவோ, தோட்டம் என்றாலே மனிதனுக்கு ஓர் இனம் தெரியாத மகிழ்ச்சி வந்து விடுகிறதோ!.

இப்படித் தோட்டம் என்பது தேவனுக்குப் பிடித்தமான ஒன்றாகவும், மனிதனுக்கு மகிழ்ச்சி தரும் ஒன்றாகவும் இருந்தா லும், வேதாகமத்தில் பல தோட்டங்கள் பற்றி நாம் தொடர்ந்து பார்க்க முடிவதில்லை. வேதாகமத்தை வாசிக்கும்போது

வசனத்தின் ஊடே ஆங்காங்கே சில இடங்களில் தோட்டம் என்று உள்ளதே தவிர, மற்றபடி ஏதேன் தோட்டம் போன்று குறிப்பிட்டுச் சொல்லும்படியாகப் பழைய ஏற்பாட்டில் எதுவுமில்லை. ஆதிப் பெற்றோர் மூலம் ஏதேன் தோட்டத்தில் தேவனுக்குக் கிடைத்த அனுபவமே போதும் போதுமென்றாகிவிட்டதோ? யாருக்குத் தெரியும் என்கிறீர்களா, அதுவும் சரிதான்.

ஒருவேளை, பழைய ஏற்பாட்டின் ஆரம்பத்தில் உள்ள, தேவனால் உண்டாக்கப்பட்ட செழிப்பும், வனப்புமான ஏதேன் தோட்டத்திற்கு இணையான ஒரு தோட்டம் புதிய ஏற்பாட்டில் இல்லாவிட்டாலும், உலககெங்குமுள்ள கிறிஸ்தவ சமுதாயத்தால் அறிந்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு தோட்டம் இருக்கவே செய் கிறது. அதன் பெயர் "கெத்செமனே". கெத்செமனே என்பதற்கு "ஒலிவ எண்ணெய் பிழியுமிடம்" என்று பொருள். இத்தோட்டம் மிகப் பெரும்பாலானவர்களால் அறிந்து வைக்கப்பட்டிருப்ப தற்குக் காரணம், இதன் இயற்கை அழகோ அல்லது ஒரு தோட்டத்திற்கே உரிய வேறு பல சிறப்பு அம்சங்களோ அல்ல. மாறாக, இத்தோட்டம் இரட்சகராகிய இயேசுவின் இப்பூமிக் குண்டான வாழ்க்கையோடு நெருக்கமான தொடர்பு கொண்டி ருந்தது தான். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இயேசு ஆண்டவர் சிலுவைக்குப் போவதற்கு முன்பாக இத்தோட்டத்தில் நடந்த அந்தக் குறிப்பிட்ட நிழ்வு தான். யாரெல்லாம் இயேசு பற்றியும், அவருடைய பாடு, மரணம் பற்றி யும் அறிந்து வைத்திருக்கிறார்களோ அவர்களெல்லாருக்கும் இத்தோட்டம் தெரியாத ஒன்றாக இருக்க முடியாது.

இப்பொழுது, அந்தத் தோட்டத்தில் நடந்த அக்குறிப்பிட்ட நிகழ்வு சம்பந்தமான பின்னணி பற்றிக் கொஞ்சம் அறிந்து கொள்ள முயற்சிப்போம்.

நியாயப்பிரமாணத்தை அழிக்க வராமல், அதை நிறை வேற்றி முடித்து வைக்கும்படியாக வந்த (மத். 5:17) இயேசு வானவர், நியாயப்பிரமாணத்தின்படி பஸ்காவைக் கடைப் பிடிப் பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட இயேசு தன்னுடைய கடைசி பஸ்கா விருந்தை எருசலேமிலுள்ள ஒரு மேல் வீட்டில், தன் சீடர்களோடு கடைப்பிடித்தார். இவ்விருந்தை முடித்த கையோடு, சீடர்களை அழைத்துக் கொண்டு ஒலிவ மலைக்கு அருகாமையிலும், அடிவாரத்திலும் இருந்த கெத்செமனே தோட்டத்திற்கு வந்தார். இயேசு கெத்செமனே தோட்டத்திற்கு வருவது ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே, இத்தோட்டத்திற்குப் பலமுறை வந்து சென்றுள்ளார் (லூக். 22:39). கெத்செமனே தோட்டம் என்பது ஏக்கர் கணக்கில் நிலப்பரப்பு கொண்ட ஒரு தோட்டமல்ல. சராசரிக்கும் குறைவான நிலப்பரப்பு

கொண்ட ஓர் இடம் இது. இத்தோட்டத்தைச் சுற்றிலும் மதில் சுவர் எழுப்பப்பட்டிருந்தது.

ஆதியாகமத்தில், தேவன் உலாவின ஏதேன் தோட்டமும், நற்செய்தி நூல்களில் தேவ குமாரனாகிய இயேசு அடிக்கடி சென்று வந்த கெத்செமனே தோட்டமும், தோட்டம் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இரண்டு தோட்டத்திற்கும் வேதாகம உண்மைகளின்படி ஒரு பெருத்த வேறுபாடு உண்டு. ஆம், முதல் மனிதனாகிய முந்தின ஆதாம், ஏதேன் தோட்டத்தில், சர்ப்பத்தின் வஞ்சகப் பேச்சுக்கு இடங்கொடுத்து தேவனுடைய வார்த்தைகளுக்குத் தன்னை ஒப்புக்கொடாமல் மீறி நடந்து, மனுகுலத்துக்கு ஆவிக்குரிய நித்திய அழிவை வருவித்தான். ஆனால், பிந்தின ஆதாமாகிய இயேசு, கெத்செமனே தோட்டத்தில், தேவ சித்தத்திற்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்து, மானிடத்திற்கு நித்திய மீட்பை உண்டு பண்ணினார்.

இயேசு ஆண்டவர் நம்மெல்லாருக்காகவும் தேவ சித்தத்தை நிறைவேற்றுவதற்கு கெத்செமனே ஒரு காரணமாக இருந்தது என்று சொன்னால் அது மியையாகாது. எப்படியெனில், பயங்கரமான பாடுகள் தன்னை எதிர்நோக்கியிருந்த வேளையில், திகிலோடும், துக்கத்தோடும், வியாகுலத்தோடும் இத்தோட்டத்திற்குள் பிரவேசித்தார் (மாற். 14:33). அங்கே தான் அழைத்துக் கொண்டுபோன பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரிடம், "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது...." என்றும் சொன்னார் (14:34). அது மாத்திரமல்ல, சற்று அப்புறம் போய், "தரையிலே விழுந்து அந்த வேளை தம்மை விட்டு நீங்கிப்போகக் கூடுமானால் அது நீங்க வேண்டுமென்று மன்றாடியுள்ளார் (14:35). இவைகளனைத்தும் அவர் எப்படிப் பட்ட பாரமான இருதயத்தோடு கெத்செமனே தோட்டத்தில் பிரவேசித்திருப்பார் என்பதற்குச் சான்று பகர்கின்றன. ஆனால், அந்த கெத்செமனே தோட்டத்திலிருந்து இயேசு வெளியே வரும் போது, முற்றிலும் மாறுபட்ட ஒரு மனநிலையோடு வந்துள்ளார். ஆம், உள்ளே சென்ற போது, " என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்று சீடர்களிடம் சொன்னவர், இப்பொழுது அதே சீடர்களிடம், "என்னைக் காட்டிக் கொடுக்கிறவன், இதோ, வந்து விட்டான், எழுந்திருங்கள், போவோம்" என்று கூறியுள்ளார். இங்கே, அவருடைய திகில், வியாகுலம், துக்கம் எல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் விலகிப் போய் விட்டதை நம்மால் காண முடிகிறது. ஆம், கெத்செமனே தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் மிகப்பெரும் பங்காற்றியிருக்கிறதென்றே தெரிகிறது.

கெத்செமனேயில் அவர் பெற்றுக்கொண்ட தேவபெலன், இயேசு சிலுவையை வெல்வதற்கு உந்தும் சக்தியாக இருந்துள்ளது. கெத்செமனே பாடுகளுக்கான இடமாக மாத்திரம் இல்லாமல், பெலனுக்கான இடமாகவும் இருந்துள்ளது.

இப்பொழுது, இயேசு கெத்செமனேயில் பட்ட பாடுகள் பற்றியும், பெற்றுக் கொண்ட பெலன் பற்றியும் கவனித்து நமக்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

## I. கெத்செமனே பாடுகளுக்கான இடமாக இருந்தது

இயேசுவின் வாழ்க்கையோடு நெருக்கமான தொடர்பு கொண்ட கெத்செமனே தோட்டம் கொடுக்கும் முதல் கனி, தேவனைப் பிரியப்படுத்தும் இப்பூமிக்குண்டான வாழ்க்யில் பாடுகள் இருக்கும் என்பது.

பாடுகள் என்பது மனிதர்களாகிய நமக்கு ஒன்றும் புதிதல்ல. எல்லோரும் ஏதாவது ஒரு சூழ்நிலையில் பாடுகளைக் கடந்து செல்ல வேண்டியவர்களாகவே உள்ளோம். ஆனால், நம்முடைய பாடுகளுக்கும், கெத்செமனேயில் இயேசு ஆண்டவர் பட்ட பாடுகளுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. நம்முடைய பாடுகளுக்குக் காரணம் நம்முடைய பெலவீனம். ஆனால், இயேசுவின் பாடுகளுக்குக் காரணம் நம்மெல்லாருடைய பாவம். தன்மையினடிப்படையில் பார்க்கும் போது நம்முடையது "பாடுகள்" என்றால், இயேசுவினுடையது "படாதபாடு". அவர் பட்ட பாடுகளின் கொடுமையை விளக்குவதற்கும், நாமெல்லாரும் விளங்கிக் கொள்வதற்கும் நம்முடைய வழக்கத்தில் நாம் அதிகம் பயன்படுத்தாத விதவிதமான வார்த்தைகளை ஆவியானவர் பயன்படுத்தியுள்ளார்.

ஆம், மாற்கு 14:33-ல் " திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார் " என்றுள்ளது. இயேசுவின் இந்த நிலையை, வைத்தியனாகிய லூக்கா "அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" என்று கூறுகிறார் (லூக். 22:44).

வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் இயேசுவின் சரீரத்திலிருந்து வந்தது என்கிற வேதாகம உண்மையை ஏற்றுக் கொள்வதற்கு மருத்துவ உலகம் 19-ம் நூற்றாண்டின் இறுதிவரை கடும் தயக்கம் காட்டி வந்தது. பரிசுத்த எழுத்துக்களின் இக்கூற்று மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என்று அடித்து வாதிட்டது. ஆனால், 1874-ம் ஆண்டு, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல மருத்துவர் "வில்லியம் ஸ்ட்ராட்" என்பவர், இது சாத்தியம் தான் என்று விளக்கினார். பிறகு, ஒரு 100 ஆண்டுகள் கழித்து, நோய்களைக் கண்டறிவதில் நிபுணரான அமெரிக்க மருத்துவர் "வில்லியம் எட்வர்ட்" (1986-ம் ஆண்டு) டாக்டர் ஸ்ட்ராட் சொன்னது உண்மை தான் என்று உறுதி செய்தார். அதாவது, துக்கமும், திகிலும் மிக அதிகமான அளவில் ஒன்று சேர்ந்து, ஒருவரை உணர்வுப்பூர்வமாகத் தாக்கும் போது, சம்பந்தப்பட்டவருடைய இரத்த நாளங்கள் விரிவடையுமென்றும்,

அப்பொழுது, தோல் மென்மையும், இளக்கமுமடைந்து, இரத்த நாளங்கள் வெடித்து, இளக்கமடைந்த தோலிலுள்ள துவாரங்கள் வழியாக இரத்தம் கசிந்து வெளியேற வாய்ப்புண்டு என்று விளக்கமளித்தார்.

உலகம் தோன்றியது முதல் கோடான கோடி மக்கள் இப்பூமியில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களில் எண்ணிலடங்கா தோர் பாடுகளும், பெரும்பாடுகளும் பட்டிருக்கிறார்கள். அந்தப் பாடுகள் கடும் உழைப்பினிமித்தமாக இருந்திருக்கலாம் அல்லது தாங்க முடியாத மன வேதனையினால் இருந்திருக்கலாம் அல்லது பெரும் வியாதியினிமித்தம் இருந்திருக்கலாம். இருப்பினும் அவர்களில் ஒருவருக்குக் கூட வேர்வை இரத்தத்தின் பெருந்துளி களாய் வெளியே வரவில்லை. ஆனால், இயேசுவுக்கு வந்துள் ளது. அப்படியானால், கெத்செமனேயில் அவர் பட்ட பாடுகளின் அளவை எண்ணிப்பாருங்கள்! சொல்லப் போனால், அவைகளை முழுமையாக என் மனத்திரையின் முன் கொண்டு வந்து உங்க ளுக்கு விளக்கு என் அறிவு போதவில்லை. எது எப்படியோ! இயேசு தன் ஆத்துமாவில் பட்ட அந்தப் பாடுகள் அனைத்தும் நம் எல்லாருடைய பாவங்களுக்காகத்தான்.

இயேசுவானவர் சிலுவைக்குப் போய், சரீரத்தில் பட்ட பாடுகள் தனி. அது நம் அறிவுக்கு எட்டக்கூடியதாக உள்ளது. ஆனால், கெத்செமனேயில் பட்டது இதுவரை உலகம் கண்டிராதது. மருத்துவ உலகத்தை ஆச்சரியத்தில் திகைக்க வைத்தது. இயேசு பாடுபட்டது கெத்செமனேயில் அதிகமா அல்லது கொல்கொதா வில் அதிகமா என்று ஒரு விவாதம் நடந்தால் கெத்செமனே தான் ஜெயிக்கும் என்று தெரிகிறது. தேவசித்தத்தை நிறைவேற்று வதற்கும், நமக்கு நித்திய மீட்பை உண்டு பண்ணுவதற்கும் தான் அந்தப் பாடுகள் அனைத்தையும் தன்னந்தனியாக ஏற்றுக் கொண்டு சகித்தார்.

அருமையானவர்களே, தேவ சித்தத்தை நிறைவேற்றும்படி யாய் நம்மை நாம் ஒப்புக் கொடுக்கும் போது இப்பூமியின் வாழ்க்கையில் பாடுகள் இருக்கவே செய்யும். கிறிஸ்தவ வாழ்க்கை பாடுகளுக்கு அப்பாற்பட்டது என்று நாம் எண்ணி னால், நாம் கிறிஸ்தவத்தை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று தான் பொருள். அப்போஸ்தலன் பவுலடியார் கிறிஸ்தவத் தின் ஆழத்தை அருமையாகப் புரிந்து வாழ்ந்தார். ஆகவே தான், தனக்காக ஆன்மாவிலும், சரீரத்திலும் பாடுகள் பட்ட கிறிஸ்து வுக்காக, எல்லாப் பாடுகளோடும் வாழ தன்னை ஒப்புக் கொடுத்தார். பவுலடியார், கிறிஸ்துவினிமித்தம் பட்ட பாடுகளை நாம் 2 கொரி. 11:23-28 வசனங்களில் காணமுடியும். அவர் பாடுகள் பட்டது மாத்திரமல்ல, தேவனை உண்மையாய் நேசிப்பவர்கள் பாடுபட வேண்டியிருக்கும் என்பதையும் எழுதிக் கொடுத்துள்ளார். "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ

பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று (II தீமோத். 3:12).

ஆகவே, தேவ சித்தத்தை நிறைவேற்றும்படியான நம்முடைய முயற்சியில் எப்படிப்பட்ட சோதனைகள், வேதனைகள், துன்பங்கள், துயரங்கள், கண்ணீர்கள் வந்தாலும் கலங்காமல் நம்முடைய பக்திப் பயணத்தை தொடர வேண்டும். நாம் கடுமையான, சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் போது இயேசுவின் "கெத்செமனே" தோட்டத்தை நினைத்துக் கொள்வோம், அதுபோதும்.

## II. கெத்செமனே பெலனுக்கான இடமாகவும் இருந்தது

இயேசுவின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்ட கெத்செமனே தோட்டம் கொடுக்கும் அடுத்த கனி, தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து வாழ்பவர்களுக்குப் பாடுகள் இருந்தாலும், அவைகளைத் தாங்கிக் கொள்ளும்படியான பெலன் கிடைக்கும் என்பது.

கெத்செமனே இயேசுவுக்குப் பாடுகளுக்கான இடமாக மாத்திரம் இருக்க வில்லை. பாடுகளுக்கு மத்தியில் தேவையான பெலனைப் பெற்றுக் கொள்ளும்படியான இடமாகவும் மாறியது. இந்தப் பெலனை தேவ சித்தத்திற்குத் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்ததினால் பெற்றுக்கொண்டார்.

இயேசுவானவர் இப்பூமியில் இருந்தபோது பரலோகத்திலுள்ள தேவனை நோக்கிப் பலமுறை ஜெபித்துள்ளார். ஆனால், மற்ற ஜெபங்களுக்கும், கெத்செமனே ஜெபத்திற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்ற இடங்களில், "கண்களை வானத்துக்கு ஏறெடுத்து" (யோவான் 17:1). "வானத்தை அண்ணாந்து பார்த்து" (மாற். 6:41) ஜெபித்தார் என்றுள்ளது. ஆனால், கெத்செமனேயில் அவர் ஏறெடுத்த ஜெபம் பற்றி நற்செய்தியாளர்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமான, அதே வேளையில் மிகவும் பொருள் பொதிந்த சொற்களையும், சொற்றொடர்களையும் பயன்படுத்தியுள்ளார்கள். "முகங்குப்புற விழுந்து ஜெபித்தார்" என்று (மத். 26:39). மத்தேயுவும், "தரையிலே விழுந்து ஜெபித்தார்" (மாற். 14:35) என்று மாற்குவும், "முழங்கால்படியிட்டு" (லூக். 22:41) ஜெபித்தார் என்று லூக்காவும் குறிப்பிடுகின்றனர். இயேசுவின் கெத்செமனே ஜெபத்தை மனதில் வைத்து, எபிரெயர் ஆசிரியர் இன்னும் ஒரு படிமேலே சென்று, "பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும், இன்னும் பயபக்தியோடும் ஜெபித்தார்" என்று கூறுகிறார். (எபி. 5:7) இவைகளனைத்தும், இயேசு கெத்செமனே ஜெபத்தில் தன்னை எப்படி ஈடுபடுத்தினார் என்பதையே காட்டுகிறது. தேவனை நோக்கி ஏறெக்கப்படும் ஒரு ஜெபம் இப்படித்தான் இருக்க வேண்டுமென்பதற்கு இதை விடச் சிறந்த இலக்கணம் இருக்க முடியாது.

எபிரெயர் ஆசிரியர் வேறொரு கூடுதலான தகவலையும் கொடுக்கிறார். அதாவது, இயேசுவின் ஜெபம் " பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டது " என்று. பொதுவாக, ஒரு ஜெபம் கேட்கப்பட்டது என்றால் அதன் பொருள், ஜெபத்தின் மூலமாகக் கேட்கப்பட்டது ஏற்றுக்கொள்ளப்பட்டது அல்லது கிடைத்து விட்டது என்பது. இயேசுவின் ஜெபத்தைக் கவனியுங்கள். "சற்று அப்புறம் போய், தரையிலே விழுந்து, அந்த வேளை தம்மை விட்டு நீங்கிப் போகக் கூடுமானால் அது நீங்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு; அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப் போடும், ஆகிலும், என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று மன்றாடினார் (மாற். 14:35,36). இயேசுவின் மன்றாட்டின் மையம், "அந்த வேளையும், அந்தப் பாத்திரமும்" தன்னை விட்டு நீங்க வேண்டுமென்பது தான். "ஆகிலும், என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று முடித்துக் கொண்டார்.

இந்த ஜெபம் பயபக்தியினிமித்தமாகக் கேட்கப்பட்டதாக நாம் எபிரெயர் 5:7-ல் வாசிக்கிறோம். எவ்விதம் கேட்கப்பட்டது? இயேசுவானவர் ஜெபித்தபடி அந்த வேளையும், அந்தப் பாத்திரமும் தேவனால் எடுத்துப் போடப்பட்டதா? இல்லை. அப்படியானால், ஜெபம் "கேட்கப்பட்டது" என்பதின் பொருள் தான் என்ன? "உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்ற இயேசுவின் கோரிக்கை இங்கே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆம், "அந்த வேளையையும், அந்தப் பாத்திரத்தையும்", என் குமாரனே, நீ சகித்துத்தான் ஆக வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.

முந்தின ஆதாம், "உம்முடைய சித்தத்தின் படியல்ல, என்னுடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று சொன்னதின் மூலம், பாவத்தின் ஊற்று திறக்கப்பட்டு. ஜீவ விருட் சத்துக்குப் போகும் வழியும் அடைக்கப்பட்டது (ஆதி. 3:24). ஆனால், பிந்தின ஆதாமாகிய இயேசு பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்த செயல், பாவத்தின் மீது வெற்றியையும், ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரத்தையும் பெற்றுத் தந்தது. (வெளி. 22:14) இயேசு கெத்செமனேயில் எதைச் சாதித்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

அந்தப் பாத்திரத்தை ஏற்றுத்தான் ஆக வேண்டுமென்று பதிலளித்த தேவன், அந்த வேளைக்காக அவரை எப்படித் தயார் படுத்தினார்? "அப்பொழுது, வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" (22:43) என்று லூக்கா கூறுகிறார். தேவன் தம்முடைய தூதனை அனுப்பியுள்ளார். அவருடைய பிள்ளைகள் காரியத்தில் தேவன் எப்படி செயல்படுகிறார் என்று இங்கே நாம் தெரிந்து கொள்வது நல்லது.

அப்போஸ்தலன் பவுல், தன்னிலுள்ள "முள்" நீங்கும்படியாக மூன்று தரம் ஜெபித்தார். "அது என்னை விட்டு நீங்கும்படிக்கு நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர் என் கிருபை உனக்குப் போதும்" பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றார் (2 கொரி. 12:9). இங்கே, தேவனால், பவுலடியாருக்கு கொடுக்கப்பட்ட பதிலைப் பாருங்கள், பவுலுடைய மன்றாட்டு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக, சவாலை எதிர்கொள்ளும்படியாகவும், அதை மேற்கொள்ளும்படியாகவும் பெலன் கொடுக்கப்பட்டது.

கெத்செமனே தோட்டத்தில், சிலுவையை எதிர்கொள்வதற்குத் தேவையான அனைத்து பெலனையும் இயேசுவானவர் பெற்றுக் கொண்டார். அவருடைய ஊக்கமான ஜெபமும், என்ன நேர்ந்தாலும் நான் தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுப்பேன் என்ற தீர்மானமும் அவர் அந்த பெலனைப் பெற்றுக் கொள்ளக் காரணமாய் இருந்தது. எந்த "வேளை" வராமல் போனால் பரவாயில்லை என்று எண்ணினாரோ, எந்தப் "பாத்திரம்" எடுக்கப்பட்டு விட்டால் நன்றாக இருக்குமே என்று நினைத்தாரோ, அந்த வேளைக்கும், அந்தப் பாத்திரத்துக்கும் இப்பொழுது முழுமையாக இயேசு தயாராகி விட்டார். தன்னுடைய சீடர்களைப் பார்த்து, "என்னைக் காட்டிக் கொடுக்கிறவன், இதோ, வந்து விட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார்". கெத்செமனேக்குள் பிரவேசித்த போது, சீடர்களிடம் அவர் பேசின பேச்சுக்கும் வெளியே வரும் போது வெளிப்படுத்தின தொனிக்கும் கவனிக்கத்தக்க மாற்றம் தெரிகிறது. இந்த மாற்றம் கெத்செமனேயில் தான் நடந்தது.

அருமையானவர்களே! இவ்வளவு பெரிய மாற்றத்தை உண்டாக்கின கெத்செமனேயே நாம் இனி ஒரு தோட்டமாகவோ, இயேசுவானவர் அடிக்கடி சென்று வந்த ஓர் இடமாகவோ மட்டும் பார்க்காமல், தேவ சித்தத்தை நிறைவேற்றும்படியாய், எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள, எந்த ஒரு சவாலையும் சந்திக்கத் தேவையான பெலனைக் கொடுக்கும் ஓர் இடமாகப் பார்க்க வேண்டும். பரலோகத்தின் தேவனைப் பிரியப்படுத்தும் இப்பூமிக்குண்டான வாழ்க்கையில் சோதனைகளும், பாடுகளும், வேதனைகளும், வியாகுலமும், கலக்கமும், துக்கமும் இருக்கவே செய்யும். இப்படிப்பட்ட சூழ் நிலைகளை நாம் கடந்து வரும் போது கெத்செமனேயின் இயேசுவை நினைத்துக் கொள்ள வேண்டும். பாடுகளை அனுமதிக்கிற தேவன், பாடுகளை எடுத்துப் போடாவிட்டாலும், பாடுகளைத் தாங்கிக் கொள்ளும் படியான பெலனைக் கொடுக்கிறவராக இருக்கிறார் (1 கொரி. 10:13).

இந்த உண்மையை நாம் ஒவ்வொருவரும் சரியாகப் புரிந்து கொண்டு கிறிஸ்து இயேசுவுக்காக வெற்றி வாழ்க்கை வாழ நம்மை நாமே ஒப்புக் கொடுப்போமாக!. ஆமென்! ✪

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# பதினைந்தாம் வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## " திருமறை தியானம் " நேயர்கள் &
## " திருமறை ஆசான் " வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 7,8,9 - 2012 (திங், செவ், புதன்)**

**சிறப்பம்சங்கள்**

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- பெண்களுக்கு தனி இடவசதி.
- சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**


**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 150 /- சிறியவர்கள் ரூ. 100 /-**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**



# ஏன் நாங்கள் நரகம் இருக்கிறதாக நம்புகிறோம்?

**J.C. சோட்**

நரகம் இருப்பதை நாம் விசுவாசிப்பதால், சில வேளைகளில், நரக அக்கினி மற்றும் கந்தகம் பற்றி நாம் பிரசங்கிப்பதாக குற்றம் சாட்டப்படுகிறோம். ஜனங்கள் அவர்கள் பாவங்களுக்கான தண்டனையாக அக்கினிக் கடலிலே தூக்கி எறியப்படபோகிறார்கள் என்பதை நாம் மகிழ்ச்சியோடு சொல்லுகிறோம் என்ற ஒரு தவறான கருத்து பலருக்கு இருக்கிறது. வேதாகமம் பேசுகின்ற நரகத்தை நாம் விசுவாசிப்பதும், துன்மார்க்கர் ஒரு நாளில் அங்கே அனுப்பப்படுவார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், அப்படிப்பட்ட பயங்கரமான இடத்திற்கு யாரும் செல்வதை நாங்கள் விரும்புவதில்லை. தேவனுக்கு விரோதமான தங்கள் வழியில் இருந்து நாங்கள் திரும்ப மாட்டோம் என்று முரண்டு பிடித்து, நிச்சயமான ஆக்கினை தரும் அந்த இடத்திற்கு ஜனங்கள் செல்வதில் உண்மையாகவே எங்களுக்கு எவ்வித மகிழ்ச்சியும் இல்லை.

நாம் தொடர்ந்து படிப்பதற்கு முன்பாக, நரகம் பற்றி விளக்க நாம் நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் இங்கே என்ன பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒரு வேளை நீங்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். வேத வசனங்களில், சில வேளைகளில் நரகம் என்கிற வார்த்தை மரணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, மத்தேயு 16:18-ல் கிறிஸ்து தாம் எப்படியாக மரிப்பேன் என்பதைக் குறித்து பேசிக் கொண்டிருந்தார். ஆனால், அவருடைய மரணம் கூட இயேசு தம்முடைய சபையைக் கட்டுவதை தடுக்க முடியாது. எனவே தான், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை, அல்லது மரணத்தின் வாசல்கள் அதை தடுக்காது என்று வாசிக்கிறோம்.

ஆயினும், பொதுவாக நரகம் என்பது, துன்மார்க்கர் என்றென்றும் வாழ்கின்ற வேதனை நிறைந்த, அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலாக, நித்திய தண்டனைக்கான இடமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அது நித்திய ஜீவனை இழந்து போன ஆத்துமாக்களின் நிரந்தர குடியிருப்பாக இருக்கும்.

ஆனால், ஒருவர் இப்படிப்பட்ட பயங்கரமான இடத்திற்கு ஏன் போக வேண்டும்? அல்லது அன்புள்ள தேவன், ஏன் ஒருவரை

இந்த நரகத்திற்கு அனுப்ப வேண்டும்? இப்படிப்பட்ட கேள்விகள் நரகம் என்றால் என்ன? என்பது பற்றி நாம் மேலும் விளக்க வேண்டும் என்கிற அவசியத்தை ஏற்படுத்துகிறது. நரகமானது ஆரம்பத்தில் பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் தான் ஆயத்தமாக்கப்பட்டது. துன்மார்க்கர் பற்றி பேசும் போது, கிறிஸ்து, நியாயத்தீர்ப்பு நாளிலே, அவர்களைப் பார்த்து, "*சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்* " என்று சொல்கிறார் (மத். 25:41). பிசாசானவன் பாவம், தேவபக்தியின்மை, துன்மார்க்கம் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கிறான். எது நன்மையானதோ, எது சரியானதோ அதற்கு நேர் எதிரானவன் பிசாசு. அவன் தேவனுக்கு விரோதியாக இருக்கிறான். அவன் பக்கத்தில் நிற்க தூதர்களும் அவனுக்கு உண்டு. ஆகையால், நரகம் அவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. அதே வேளையில், மனித இனத்தின் ஆத்துமாக்களுக்காக நரகம் ஆயத்தமாக்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்ட வேண்டும். மனிதன் ஒரு பாவியாக இருந்தாலும் கூட, நரகத்திற்கு தப்பித்துக் கொள்ள தேவன் அவனுக்கு ஒரு வழியைத் தந்திருக்கிறார். மனிதன் தேவனையும், அவர் தம்முடைய குமாரனான இயேசுகிறிஸ்து மூலமாக தருகிற இரட்சிப்பையும் நிராகரிக்கும் போது, அவன் ஆத்துமாவில் இழந்து போய் நரக தண்டனையை அடைகிறான். ஆனால், அப்போது கூட தேவன் மனிதனை அங்கே அனுப்புவது இல்லை. மனிதன் தன்னைத் தானே அங்கே அனுப்பிக்கொள்கிறான். ஆகையால், மனிதன் நரகம் போவதற்கு தன்னைத் தானே குற்றம் சாட்டிக் கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களையல்ல.

நரகம் எப்போதும் கீழே இருக்கும் ஓர் இடமாகவும், பரலோகம் மேலே இருக்கும் இடமாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறது. வேதாகமம் இரண்டு இடங்களுமே உண்மையாகவே எங்கே இருக்கிறதென்று வெளிப்படுத்தவில்லை. ஆனால், இரண்டு இடங்களுமே அங்கே செல்லும்படி யாரெல்லாம் நியாயந்தீர்க்கப்படுகிறார்களோ அவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, நாம் குறிப்பிட்டிருக்கிறபடி, நரகம் என்பது தண்டனைக்கான ஓர் இடமாகும். " *தன் சகோதரனை வீணனென்று சொல்கிறவன் எரி நரகத்திற்கு ஏதுவாக இருப்பான்* " என்று கிறிஸ்து எச்சரித்தார் (மத். 5:22). ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்க்கும்படியாக கிறிஸ்து தம்முடைய தூதர்களை அனுப்புவது சம்மந்தமாகப் பேசும் போது, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள், அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத். 13:42) என்றார். யோவான் இவ்விதமாக எழுதினார். "*அப்பொழுது மரணமும், பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப் பட்டான்* " (வெளி. 20:14,15). மேலும்

யோவான், "*பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப் பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக் காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும், எரிகிற கடலிலே பங்கடைவார்கள்*" என்றார் (வெளி. 21:8). சரீர மரணம் என்று ஒன்று இருக்கிறது. முன்பு நாம் வாசித்த வசனத்தில் பேசப் பட்டிருக்கும் இரண்டாம் மரணம் என்பது தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுவதைக் குறிக்கிறது. நித்திய தண்டனைக்கான இடமாகிய நரகத்தில் தள்ளப்படுதல் என்பது, ஒருவர் தேவனிடத் திலிருந்து துண்டிக்கப்படுதலாகும், அப்படிப்பட்டவருக்கு நம்பிக்கையே இல்லை.

கிறிஸ்துவின் வருகை மற்றும் அவரின் ஊழியம் பற்றி யோவான் ஸ்நானகன் விவரித்த போது, "*மனந்திரும்புதலுக் கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக் கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக் கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினா லும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார், தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார்*" என்றான் (மத். 3:11,15). இங்கே கிறிஸ்து, பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கத்தக்கதான அளவு வல்லமையைப் பெற்றிருப்பார். நிச்சயமாகவே, இது அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து செய்த வாக்குதத்தத்தைக் குறிக்கிறது. அவர், பரிசுத்த ஆவியானவர் அல்லது தேற்றரவாளனை அனுப்புவார். அதன் பின்பு, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத் தைப் பெற்றதை நாம் வாசிக்கிறோம் (யோவான் 16:13; அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம்). ஆனால், கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கும் வல்லமை பெற்றி ருப்பார். இது, துன்மார்க்கர் அக்கினிக்கடலில் தூக்கி எறியப் படுவார்கள் என்பதைக் குறிக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமை அல்லது நீதிமான்களை களஞ்சியத்தில் சேர்ப்பார் என்றும் பதர் அல்லது துன்மார்க்கரை அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார் என்றும் ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்குகிறார்.

துன்மார்க்கர் பற்றிப் பேசும் போது, "*அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப் பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து பரிசுத்த தூதர் களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர் களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்;*

*மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும், பகலும் இளைப்பாறதலிராது* " என்று வாசிக்கிறோம் (வெளி. 14:10,11).

இயேசு இப்படிச் சொன்னார், "*ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்* " (மத். 10:28). மறுபடியும் இயேசு, " *சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே! நரகாரக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?* " (மத். 23:33). இங்கே இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த பக்தியுள்ள பாவிகளாகிய பரிசேயர்களையும், மாயக்காரரையும் குறித்து இப்படிச் சொன்னார்.

எபிரெய எழுத்தாளர், " *மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே, தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னை பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரக்கத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்கு பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்* " (எபி. 10:28,29) என்று சொல்லியுள்ளார். பவுல், " *தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்* " என்றார் (II தெச. 1:7,8). துன்மார்க்கரைப் பற்றியும், நீதிமான்களைப் பற்றியும் பேசும் போது இயேசு, " *அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்* " என்றார் (மத். 25:46). மறுபடியும் இயேசு, ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பபும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத். 8:15). பவுலடியார், "*பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்* " என்றார் (ரோமர் 6:23). அதன் பின்பு யோவான், " *மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத் தீர்க்கத்தரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்* " என்றார் (வெளி. 20:10).

சிலபேர், ஓர் ஆத்துமா நரகத்தில் போடப்படும்போது, அது உடனடியாக அல்லது முற்றிலுமாக அழிந்து போய் விடுகிறது,

அதோடு அவர்களின் கதை முடிந்து போய் விடுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆயினும், நாம் பார்த்திருக்கிறபடி, ஒருவர் நரகத்திற்குப் போய்விட்டால், சதாகாலமும் தண்டிக்கப்பட்டு, என்றென்றும் வேதனைப்படுவார். வேறுவிதமாகச் சொன்னால், பரலோகம் எதுவரை நிலைத்திருக்குமோ அது வரைக்கும் நரகமும் நிலைத்திருக்கும். ஆம், இரண்டுமே நித்தியமானது.

இப்போது நாம் வாசித்த வேதவாக்கிய்ங்களை வைத்து, சில இறுதி முடிவுகளுக்கு வருவோம். பிசாசும், அவனுடைய தூதர்களும் நரகத்தில் இருப்பார்கள். துன்மார்க்கர், தேவபக்தியற்றவர்கள், மாயக்காரர், பக்தி காரியங்களில் வஞ்சிக்கப்பட்டவர்கள் மாம்சத்தின் கிரியைகளில் ஈடுபட்டவர்கள், உண்மையில்லாதவர்கள் மேலும், இப்படிப்பட்டோர் நரகத்தில் தங்கள் பங்கைப் பெறுவார்கள்.

என் நண்பர்களே, கிறிஸ்து அளிக்கும் இரட்சிப்பு குறித்தும், நாம் நரகம் போய்விடாதபடி எடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு முயற்சி குறித்தும், எச்சரிக்கப்பட்டு, நாம் பரலோகம் போக மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிகள் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறோம். ஆனால், தேவன் தமக்குக் கீழ்ப்படியும்படி யாவரையும் கட்டாயப்படுத்தமாட்டார். முடிவு உங்களுடையது. கிறிஸ்து கொடுக்க முன்வரும் இரட்சிப்பை நீங்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது எங்கள் ஜெபமாயிருக்கிறது. இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் என்று பவுல் சொல்கிறார் (II கொரி. 6:2). நாம் இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ளுபடியாக அவரிடத்தில் வரும்படி கிறிஸ்து நம்மை அழைக்கிறார் (மத். 11:28-30). நம்முடைய இரட்சிப்பு குறித்து கவலையற்றவர்களாக இருக்கக் கூடாது என்று எபிரெய எழுத்தாளர் நமக்கு புத்திமதி சொல்கிறார் (எபி. 2:4).

நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா? பரலோகம் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் பதில், இல்லையென்பதானால், நீங்கள் ஆத்துமாவை இழந்தவர்களாகிறீர்கள். நரகம் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. என் நண்பரே, இன்னும் காலம் இருக்கும் போதே கர்த்தருக்குச் செவி கொடுங்கள். அவரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறுங்கள். அப்படி நீங்கள் செய்தால், கிறிஸ்து உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16), (அப். 2:38,47). அதன் பின்பு, நீங்கள் கர்த்தருக்காக வாழ முடியும், அவருக்கு உண்மையாக இருந்தால், ஒரு நாள் பரலோகம் உங்கள் வீடாகும். நீங்கள் என்ன செய்தாலும், தயவு செய்து நரகத்திற்குப் போய்விடாதீர்கள். ✪

# நிழலும், நிஜமும்

***(The Shadow and the Reality)***

## Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜ்குமார்

அன்பானவர்களே,

சென்ற மாதத்தில் அப்போஸ்தலராகிய பேதுருவின் கடைசி வார்த்தைகளையும் அதன் விளக்கங்களையும் கேட்ட எருசலேம் சபையார் பர்னபாவையும் தேவன் ஊழியத்தில் பயன்படுத்திய விவரங்களைக் கேட்டு சந்தோஷமடைந்தவுடன் யாக்கோபு எழுந்து பேச ஆரம்பிக்கிறார், (அப். 15:12,13) இந்த யாக்கோபு என்பவர் யார் என்று பார்ப்போம். புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்ற பெயரில் சிலர் சொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் செபெதேயுவின் குமாரர்களான யாக்கோபு, யோவான். இவர்கள் அப்போஸ்தலர்கள் பெயர் பட்டியலிலே மூன்றாவதாகவும், நான்காவதாகவும் வருகிறவர்கள் (மத். 10:2; மாற். 3:18). அடுத்தது ஆண்டவர் இயேசுவின் சகோதரர் யாக்கோபு, இயேசுவின் தாயாராகிய மரியாளின் வயிற்றில் ஆண்டவருக்கு பிறந்த 4 ஆண் பிள்ளைகளில் முதல் பெயராக சொல்லப்பட்டவர் (மத். 13:55; மாற். 6:3).

இயேசுவானவர் பரமேறிச் சென்றவுடன் பிதாவின் வாக்குத்தத்தத்திற்காக அப்போஸ்தலர்கள் எருசலேமில் காத்திருந்த போது, இவர்களுடனே "இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப். 1:5,14). அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் சுவிசேஷம் அறிவித்து சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு இயேசுவின் தாயாரும், சகோதரர்களும் எருசலேம் சபையிலே சபையாராக இருந்தார்கள். இயேசுவின் தாய் வழிச் சகோதரர்களில் யாக்கோபு பிற்காலங்களில் எருசலேம் சபையில் மூப்பராக இருந்தார் என்று சரித்திரமும் கூறுகிறது (அப். 12:17; 15:13; 21:18; கலாத். 1:19).

இயேசுவானவரின் சகோதரரும் எருசலேம் சபையின் மூப்பருமான யாக்கோபு பேச எழுந்தவுடன் அனைவருடைய பார்வையும் கவனமும் அவர் பக்கமாகத் திரும்பியது. அதற்கேற்றாற்போல அவர் அனைவரையும் நோக்கி; "சகோதரரே, எனக்குச் செவி கொடுங்கள்" என்றார் (அப். 15:13). அவருடைய பேச்சின் ஆரம்பமே கிறிஸ்துவினால் புறஜாதிகள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை சிமியோனின் தீர்க்கதரிசனத்தைக் கொண்டு விவரிக்கிறார். ஏனென்றால், யூதர்களின் நடுவில் ஒரு கருத்து நிலவியது அது " புறஜாதிகளுக்கு தேவன் இரட்சிப்பைக் கொடுப்பாரா" என்பது தான். பழைய ஏற்பாட்டு காலத்தில் அதன் மூலம் ஆசீர்வாதங்கள் இஸ்ரவேலர்களுக்கு மாத்திரம் நன்மைகள் வரும் என்று நம்பியிருந்தார்கள். ஆனால், ஆபிரகாமுக்கு சொல்லப்

பட்ட வாக்குத்தத்தத்தில் அவருடைய சந்ததிக்குள், கிறிஸ்துவுக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்பதை அநேக யூதர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தனர்" (ஆதி. 22:18) யூதர்கள் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும் என்பது உண்மை யானால் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதைப் பற்றி அவர் களுக்கு பிரச்சனையில்லை. ஏனென்றால், நியாயப்பிரமாணம் அவர்களது தேசத்தின் சட்டமாகவும் மாறியிருந்தது. ஆனால், இப்பொழுது புறஜாதிகள் இரட்சிக்கபட்டதால் யூதர்களின் மார்க்கச் சட்டம் மற்றும் தேசத்தின் சட்டங்களை புறஜாதிகள் கைக் கொள்ள வில்லை. அதை அப்போஸ்தலர்களும் கைக்கொள்ளவில்லை. அதை அப்போஸ்தலர்களும் கைக்கொள்ளும்படி போதிக்கவில்லை.

ஆகையால், சிமியோனுடைய வாக்கை யாக்கோபு இங்கே ஞாபகப்படுத்துகிறார். மேலும், இந்த நிகழ்ச்சி எருசலேமிலே நடந் திருக்கிறபடியால் இதைப்பற்றி சிலருக்குத் தெரிந்திருக்கலாம். குழந்தையாயிருந்த ஆண்டவராகிய இயேசுவை, பிறந்த எட்டாம் நாளில் நியாயப்பிரமாணத்தின்படி விருத்த சேதனம் பண்ணவும், சுத்திகரிப்பு செய்யவும் எருசலேமுக்கு கொண்டு போனார்கள். அங்கே "கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரண மடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு (சிமியோனுக்கு) அறிவிக்கப்பட்டுமிருந்தது" (லூக். 2:21-26). அப்பொழுது, சிமியோன் பிதாவை நோக்கி ஜெபித்து; "ஆண்ட வரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போக விடுகிறீர்; புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையா கவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண் ணின உம்முடைய இரட்சணியத்தை (இரட்சகரை) என் கண்கள் கண்டது" என்றான் (லூக். 2:28-32) இதிலே புறஜாதிகள் இஸ்ர வேலர்கள் என்கிற இருதரப்பு மக்களுக்கும் இரட்சகராக கிறிஸ்து இருப்பார் என்பதுதான் சிமியோனின் தீர்க்கதரிசனமாயிருந்தது என்பதை யாக்கோபு சுருக்கமாகச் சொன்ன பின்பு, அதற்காக ஒரு தீர்க்கதரிசன வாக்கியத்தையும் ஆதாரப்படுத்துகிறார் (அப். 15:15).

ஒரு மூப்பர் எந்த அளவிற்கு வேத அறிவு பெற்றிருந்தார் என்பதை யாக்கோபின் பிரசங்கமும் அவர் வசனங்களை கை யாண்ட விதமும் நமக்குத் தெளிவுறுத்துகிறது. (மூப்பர்கள் என்ப வர்கள் கூடுமிடத்தை சுத்தம் செய்து, ஒழுங்குபடுத்தி, மணி யடித்து, காணிக்கைக் கவர்களையும், உண்டியல்களையும் வீடு வீடாகக் கொடுத்து அதை வசூல் செய்கிறவராகவும், ஒரு வேலைக்காரனைப் போலவும், அதாவது, மனிதனுக்கு வேலை செய்கிற வேலைக்காரனைப் போலவும் இந்த காலத்தில் நடத்து கிறார்கள்). யாக்கோபு எடுத்துப் பயன்படுத்தின வசனம் ஆமோஸ் தீர்க்கதரிசியான புஸ்தகத்தில் இருக்கிறது (ஆமோஸ் 9:11,12) வசனங்கள் இப்படிச் சொல்லுகிறது. "ஏதோமில் மீதி யானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக் கொள்ளும்படிக்கு, அந்நாளில் விழுந்து போன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்பு

களை அடைத்து, அதில் பழுதாய்ப் போனவைகளைச் சீர்ப் படுத்தி, பூர்வ நாட்களில் இருந்தது போல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்". இங்கே 11-ம் வசனத்தில் சகல ஜாதிகளையும் கர்த்தர் வசமாக்கிக் கொள்ளுவார் என்று உரைத்திருக்கிறார். இதன் அர்த்தம் எல்லா ஜாதி மக்களும் கர்த்தரிடம் வந்து சேருவார்கள் என்பதாகும். இது புதிய ஏற்பாட்டின் காலத்தில் நடக்கும். ஆகையால், இயேசு கிறிஸ்து வானவர் உயிர்த்தெழுந்த பிறகு தம்முடைய அப்போஸ்தலர்க ளிடத்தில் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று சொன்னார்.

மேலும், யாக்கோபு இங்கே ஆமோஸ் 9:12-ம் வசனத்தைப் பயன்படுத்துவதின் நோக்கம்: தாவீதின் கூடாரத்தில் பழுதாய்ப் போனவைகளை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக புதியவைகளை சேர்த்து கூடாரத்தைக் கர்த்தர் ஸ்தாபிக்கிறார் என்று சொல்லு கிறார். தாவீதின் கூடாரம் என்பது தாவீதின் அரசாட்சி. அதில் பழுதாய்ப் போனது என்பது அவிசுவாசமாகப் போன இஸ்ர வேலர்கள். சீர்படுத்துதல் என்பது விழுந்து போன இஸ்ரவேலர் களுக்குப் பதிலாக தேவன் புறஜாதிகளை அந்த இடத்திலே சேர்த்து நிறைவாக்குகிறார் என்பதாகும் (ஒப்பிட்டு பார்க்க ரோமர் 11:17-21). சீர்படுத்தப்பட்ட தாவீதின் கூடாரத்தை தாவீதின் குமாரரான இயேசு கிறிஸ்து அரசாட்சி செய்வார் (மத். 1:1). இயேசு கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்திலே, அது கர்த்தருடைய சிங்காசனம் அதிலே உட்கார்ந்து ஆவிக்குரிய இராஜ்யத்தை சபையை அரசாளுவார் என்பதாகும்; 1 நளா. 29:23; யோவான் 18:36; அப். 2:34- 36; வெளி. 1:4-6) ஆகையால், இது புதிய ராஜ்யம் ஆவிக் குரிய ராஜ்யம் எல்லா ஜாதிகளும் வாசம் பண்ணும் ராஜ்யம் இந்த ராஜ்யத்தில் புதிய சட்டங்கள் தான் நடைமுறையில் இருக்கும். ஏனென்றால், புதிய கூடாரத்திற்கு புதிய மக்கள் புதிய சட்டங்கள் தான் இருக்கும் என்பதை யாக்கோபு விவரிக்கிறார்.

ஆகையால், யாக்கோபு மூப்பர் : "ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாதென் றும், விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுத வேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன். மோசேயின் ஆகமங்கள் ஓய்வு நாள் தோறும் ஜெப ஆலயங்களில் (யூதருடைய கூடுமிடங்களில்) வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பூர்வ காலந்தொடங்கிச் சகல பட்டணங்களிலும் அந்த ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்களும் உண்டே என்றான்.

யாக்கோபு மூப்பராக மட்டுமல்ல அவர் பரிசுத்த ஆவியி னால் ஏவப்பட்ட தீர்க்கதரிசியாகவும் இருந்தார். இவர் தேவனி டத்திற்கு திரும்புகிற புறஜாதிகளைக் கலங்கப் பண்ணக் கூடாது என்று சொல்வது புறஜாதிகள் புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு ஆகிய இரண்டு ஏற்பாடுகளையும் கைக் கொள்ளச் சொல்லி அவர் களை கலங்கடிக்கக்கூடாது என்றார். இவ்வளவு நேரமாக யாக்கோபு யாரை ஆதரித்து பேசப்போகிறார் என்கிற பார்வையாளர்களின்

கேள்விக்கு ஒரு பதில் சொல்வதைப் போல அவருடைய இந்த வார்த்தைகள் அமைந்திருந்தது. அப்போஸ்தலர்களான பேதுரு, பவுல் சுவிசேஷகனான பர்னபா போன்றவர்களின் கருத்தை ஆதரிக்கப்போகிறாரா அல்லது யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களான சகோதரர்கள் நியாயப்பிரமாணத்தையும் கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்களே அந்தக் கருத்தை ஆதரிக்கப் போகிறாரா என்கிற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படியாக இவர் பேதுரு, பவுல், பர்னபா போன்றோர் கொண்டு வந்த கருத்தை ஆதரித்தார். ஆகையால், கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணமாகிய பழைய ஏற்பாட்டை கைக்கொள்ள வேண்டியது இல்லை என்பது மிகப் பெரிய தீர்ப்பாய் இருந்தது. நியாயப்பிரமாணத்தின்படி பார்த்தாலும் இரண்டு மூன்று சாட்சிகளினால் ஒரு காரியம் உறுதிப்படும் என்று சொன்னபடி நியாயப்பிரமாணம் கிறிஸ்தவர்கள் கைக் கொள்ள வேண்டாம் என்கிற கருத்து பிதாவாகிய தேவனாலும், கிறிஸ்துவாலும், பரிசுத்த ஆவியானவராலும், அப்போஸ்தலர்களாலும், மூப்பர்களாலும், சபையாராலும் அங்கீகரிக்கப்பட்டு தேவையில்லை என்கிற முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது மட்டுமல்ல, இந்தக் கருத்து எருசலேமிலுள்ள சபைக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரவியிருக்கின்ற எல்லா பிராந்திய சபைகளுக்கும் எழுதியனுப்பவும் தீர்மானம் செய்யப்பட்டது. இந்த விவரங்களை நாம் அடுத்த மாத இதழில் இன்னும் விவரமாக கவனிக்கலாம்!.

**(தொடரும்)** ☆

## திருமறை ஆசான் இதழ் உரிமை பற்றிய அறிக்கை
## திங்களிதழ் விதிப்படிவம்

## Form - IV

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | 86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. |
| அச்சிடுவோர் பெயரும் முகவரியும் | : | சன் ஆப்செட் பிரிண்டர்ஸ், 50, கோவை ரோடு, காங்கயம் - 638 701. |
| இந்திய குடிமகனா | : | ஆம் |
| ஆசிரியர் பெயர் | : | S. ராஜநாயகம் |
| முகவரி | : | 86-A, தாராபுரம் ரேடு, காங்கயம் - 638 701. |
| இந்திய குடிமகனா | : | ஆம் |
| இதழுக்குரியவர் பெயரும் முகவரியும் | : | S. ராஜநாயகம் 86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. |

ராஜநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விபரங்கள் நம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

(ஒப்பம்)

காங்கயம்.

S. ராஜநாயகம்

# நல்ல பங்கை தெரிந்தெடுப்பது

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்தக் கட்டுரையின் வாயிலாக நாம் சந்திக்க இரக்கம் காட்டின தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

நம்மை விட்டெடுபடாத நல்ல பங்கு என்ன, அதை எவ்வாறு தெரிந்தெடுப்பது என்று வேதத்தின் துணை கொண்டு பார்க்க உள்ளோம். உலகப் பொருளும், ஆவிக்குரிய காரியங்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து காணப்பட்டாலும், அவ்வப்போது இரண்டையும் வேறுபடுத்திப் பார்த்து ஆவிக்குரிய காரியங்கள் முதல் இடத்தை வகிக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து போதித்திருக்கிறார். லூக். 10:38-42 வசனப்பகுதிகளில் மார்த்தாள், மரியாள் சம்பவம் இடம் பெற்றுள்ளது. மார்த்தாள் பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் சிரத்தை காட்டினாள். மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்கின மார்த்தாளிடம், "தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்" என்று இயேசு சொன்னார்.

எதற்காக இயேசு மார்த்தாளைக் கடிந்து கொண்டார்? அவள் வசனத்துக்கு முக்கியத்துவம் தராமல் சமைத்துக் கொண்டிருந்தாளே, அதற்காகத்தான். அன்றாட வீட்டு வேலைகளைப் போட்டு பெரிது பண்ணி, அலட்டிக் கொண்டு ஆவிக்குரிய காரியங்களைத் தன் மனதுக்குள்ளே கொண்டு செல்ல அவள் அனுமதிக்கவில்லை. உணவு தயாரிப்பதென்பது தீமையல்ல, நல்லது தான். இயேசு கிறிஸ்து பவுல் போன்றவர் தங்களுக்குச் சமைத்துப் போடவும், துணிகள் துவைத்து, தேய்த்து என்று சரீர தேவைகளை பூர்த்தி செய்ய பெண்களைச் சேர்த்திருக்கலாம். மார்த்தாக்கள் தேவையென்பது இயேசுவுக்கும் தெரியும். ஆனால், இந்த நன்மையான, தேவையான வேலைகள் எல்லாம் ஆவிக்குரிய பொறுப்புகளுக்கு அடுத்தது தான் என்பதை நாம் கற்றுக் கொள்ள இந்த மாதிரி மார்த்தாக்களும் தேவைப் படுகிறார்கள். சரீரத் தேவைகளை விட ஒரு சிறந்த காரியத்துக்கு வழிநடத்தும்படியாக மார்த்தாக்களின் செயல்பாடு இருக்க வேண்டும்.

## இயேசு கிறிஸ்து தேவையானது ஒன்றே என்றார்

நாம் வாழும் வாழ்க்கைக்கு ஒரே ஒரு நோக்கம் இருக்கிறது என்று பொதுவாக எல்லோருமே அறிவோம். ஆனால், அந்த ஒன்று எது என்பதை அறிந்து கொள்ள

அநேகர் இந்த உலகத் தையே சுற்றி குழம்பிப்போய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு சிலர், அந்த ஒன்று, உலகப் பொருள்களை வெற்றிகரமாக சம்பாதிப்பதிலும், சமுதாய அந்தஸ்திலும், கலை அறிவிய லிலும் இருப்பதாக எண்ணித் தேடி ஏமாற்றமும் அடைகிறார் கள். நம்முடைய இரட்சகர் அந்த ஒரே நோக்கம் என்ன என்பதை விவரிக்கும் போது "நம்மை விட்டு எடுபடாத" ஒன்றை தெரிந்தெடுக்க வேண் டும் என்று கூறுகிறார். "உலகத் திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்" (1 தீமோ. 6:7). நாம் மரிக்கும்போது நாம் எல்லா உலக சம்பத்துக்களிலி ருந்தும் பிரிக்கப்படுகிறோம். அப்போது, எது "நம்மை விட்டு எடுபடாதது?". ஆத்துமா மட்டுமே. ஆகையால், என்றும் அழியாத ஆத்துமாவை நித்தி யத்திற்கு ஆயத்தப்படுத்துதலே வாழ்க்கையின் நல்ல பங்கு - அதாவது, ஆராதனை, ஜெபம், தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பது, அதை மற்றவர்க ளுக்கு கற்றுக் கொடுப்பது, ஆவியின் கனிகளை பெற்றுக் கொள்வதற்காக பிரயாசப்படு வது, ஆவிக்குரிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக எல்லா கற்பனைகளையும் கைக்கொள் வது போன்றவையாகும். இந்தக் காரியங்கள் தான் உன்னத நோக்கத்தை அடைய உதவு பவைகள்.

## ஆவிக்குரிய காரியங்களின் மேன்மை

"ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" (லூக். 12:15) என்று இயேசு சொன்னார். பொருள் என்பதே தவறு அல்ல. பொருளை வைத் திருப்பது அவசியம் என்றாலும் உண்மையான வாழ்க்கை என்பது பொருளினால் அல்ல. தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கை மையமாக வைத்து வாழும் ஒரு நபர் பொருளை ஈட்டலாம், தனக்கென்று ஒரு வீட்டை வைத்திருக்கலாம், ஓய்வு எடுக்கலாம், மற்றவர்க ளோடு சந்தோஷமாக நேரத் தைச் செலவிடலாம். ஏனென் றால், கலைகளெல்லாம் வாழ்க் கையின் ஒரு ஓரம் போன்றது என்பதை புரிந்து வைத்திருப் பார். இவையெல்லாம் மேடை யிலே வந்து போகக்கூடிய திரைச்சீலை போன்றது தான். இவைகளை மட்டுமே மைய மாக வைத்து ஆவிக்குரிய காரியங்களை ஒரு புறமாக ஒதுக்கி வைத்து விட்டு வாழும் ஒருவன், பிரம்மாண்டமான மேடை ஒன்றை அமைத்து மிகச் சிறந்த கட்சி அமைப்புகளை அமைத்து ஒரு போதும் அரங் கேறாத நாடகத்துக்காக காத்தி ருப்பவனைப் போல்தான் இருப் பான்.

"மனுஷன் உலகம் முழு வதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு

லாபம் என்ன?" (மாற். 8:36). இதைத்தான் லூக்கா 12:19-21 வசனங்களில் பணக்கார மதி கேடனின் வாழ்க்கையில் பார்க் கிறோம். தனக்காக செல்வங் களைத் தேடிக் கொண்டு தேவ னுக்காக ஐசுவரியத்தை தேடாத தினால் அவன் மதிகேடன் என்று அழைக்கப்படுகிறான்.

அழிந்து போகிற போஜ னத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள் என்று யோவான் 6:27-ல் இயேசு கிறிஸ்து கூறி யிருக்கிறார். உணவுக்காக வேலை செய்யக்கூடாது என்பது இதன் பொருளா? கண்டிப்பாக இல்லை. ஆவிக்குரிய போஜ னத்தோடு சரீர போஜனத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது அது ஒரு பொருட்டே அல்ல என்பது தான் இதன் பொருள்.

அன்பான சகோதரிகளே, உலகம், தேவன், உலக உடை மைகள், ஆத்துமா இவைகள் பற்றி பார்த்தோம். உலகக் காரியங்கள் அழிந்து போகக் கூடியவைகள். ஆத்துமா அழியா தது. நம்மை விட்டுப் பிரிக்க முடியாதது ஆன்மா ஒன்று மட்டுமே என்பதை நாம் என்றும் மறந்து விடக்கூடாது. ஆவிக் குரிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவது விலையுயர்ந்த ஆபரணங்களைக் காட்டிலும் மதிப்புடையது. முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப் பெற்றது. நீ இச்சிக்கத்தக்க தொன்றும் அதற்கு நிகரல்ல (நீதி. 3:15).

அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப் படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்ற விசுவாசம் சோதிக்கப்பட்டு என்று 1 பேதுரு 1:7ல் வாசிக்கி றோம். சோதிக்கப்படும் விசு வாசம் எப்படி பொன்னைக் காட்டிலும் விலையேறப் பெற்றது? இந்த விசுவாசம் ஆவியில் ஒருவர் வளர்வதற்கு உதவும் பொக்கிஷமாக இருக் கிறது. எனவே, இது அழிந்து போகிற பொன்னைக் காட்டி லும் அதிக மதிப்புடையது, விலையேறப்பெற்றது.

தேவன் நிர்ணயித்திருக் கிற அந்த அளவின்படி வாழும் ஒரு பெண் குணசாலியான பெண்ணாகத் திகழ முடியும். முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்த விலையை அவள் பெறுகிறாள் (நீதி. 31:10).

மரியாள் தேவையானது ஒன்று, அது தன்னை விட்டெடு படாத நல்ல பங்கு, அந்த நல்ல தன்னை விட்டு எடுபடாத ஆத்துமாவுக்கடுத்த காரியங்க ளில் நேரத்தை கழிப்பதென் பதை அறிந்திருந்தபடியால் இயேசுவின் பாதத்தில் அமர்ந் திருப்பதைத் தெரிந்தெடுத்தாள். இயேசுவும் அதை அங்கீகரித் தார். நாமும் கூட ஆத்துமா சம்பந்தப்பட்ட காரியங்களை தெரிந்தெடுத்து, அழியாத நித்தி யத்தை சுதந்தரிக்க இயேசு சொல்லிச் சென்ற காரியங் களைச் செய்வோமாக! ஆமென்!

வாலிபர் பகுதி

# வாலிபத்திலே மோசே!

Bro. பென்னிமார்ட்டின்

மாசில்லாத வாழ்க்கை வாழ்ந்து இன்றும் நமக்கு மாதிரியாக இருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாலிபர்களாகிய உங்களை வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நம் பரிசுத்த வேதாகமத்தை தியானிக்கும் போது எத்தனையோ பரிசுத்தவான்கள் தேவனுக்காக வாழ்ந்து மரித்துப் போயிருக்கிறார்கள். அவர்களில் சிலருடைய விசுவாசம் நம்மை சிந்திக்க வைக்கிறது. சிலருடைய விசுவாசத்தைப் பார்த்து தேவனே மெச்சியிருக்கிறார். அப்படி தேவனால் மெச்சப்பட்ட பரிசுத்தவான்களில் மோசேயும் ஒருவர். இவரைக் குறித்து தேவன் " பூமியிலே சாந்த குணமுள்ள மனிதன் " (எண். 12:3) என்றும், "தேவனுடைய சிநேகிதன்" என்றும் சொல்லியிருக்கிறார். இப்படி தேவனால் புகழப்பட்ட மோசேயைப் பற்றி பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டு பக்கங்களில் எபிரெய ஆசிரியரைக் கொண்டு "கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் என்று சொல்லியிருக்கிறார் (எபி. 11:26).

வாலிப உள்ளங்களே கிறிஸ்துவின் காலத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மோசே கிறிஸ்துவை பார்க்காமலேயே கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணி இருக்கிறார் என்றால் அவருடைய விசுவாசம் எப்படிப்பட்டது என்று யோசித்துப் பாருங்கள். இந்த மோசேயும் பவுலைப் போல தனக்கு இலாபமாயிருந்தவைகளையெல்லாம் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று விட்டு குப்பையுமாக எண்ணி இருக்கிறார். மோசே தன்னுடைய வாலிப வயதில் தேவனுக்காக எவைகளையெல்லாம் விட்டார் என்று சற்று ஆராய்வோம்.

## I இளவரசர் என்கிற பட்டத்தை விட்டார்

பரிசுத்த ஆவியானவர் வாலிபர்களாகிய நமக்கு கொடுக்கும் முதல் பாடம், கிறிஸ்துவினிமித்தம் வரும் பலனுக்காகவும், நிந்தைக்காகவும் மோசே "பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்தான்" (எபி. 11:24). வாலிபர்களே இந்த வசனத்தை சிந்தித்துப் பாருங்கள். மோசே இங்கு ராஜ குமாரத்தியின் மகன் என்ற பெரிய சிலாக்கியத்தையே வெறுத்து ஒதுக்கியிருக்கிறார். முயன்றாலும் கிடைக்காத இந்த மாபெரும் வாய்ப்பை வெறுத்து ஒதுக்கிய மோசேயைப் பார்த்து உங்களில் சிலர் பிழைக்கத் தெரியாத ஆள் என்று கூட சொல்லலாம். ஆனால், ஆவிக்குரிய பிரகாரமாக பார்த்தால் மோசே சரியான முடிவைத்தான் எடுத்திருக்கிறார். நாம் சற்று ஆராய்ந்து பார்த்தால் அது நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. ஏனென்றால், மோசேயின் காலத்தில் இயேசு பிறக்கவில்லை, பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தான் பிறந்தார். இயேசு கிறிஸ்துவுக்காகவும்

அவருடைய மீட்புக்காகவும் அன்று தனக்கு லாபமா யிருந்த "பார்வோனின் குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்து" அவைகளை நஷ்டமென்று விட்டிருக்கிறார். மேலும், "பார்வோனின் குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத் தான்" என்று பார்க்கிறபோது யோவான் ஆசிரியர் சொன்னது போல "ஜீவனத்தின் பெருமையை (1யோவான் 2:16) விட்டிருக் கிறார். அதேபோல நாமும் நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்கு எது தடையாக இருக்கிறதோ அவைகளைக் களைந்தெறிய வேண்டும். ஏனென்றால், நாம் கிறிஸ்துவின் காலத்திலும், ராஜ்ஜியத்திலும் பங்குள்ளவர்களாக இருக்கிறோம். ஆகை யால், நம் ஜீவனத்தின் பெருமையை விட்டு, பாரமாய் இருக்கிற வைகளை தள்ளிவிட்டு நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையாக ஓடக்கடவோம் (எபி. 12:1).

## II அநித்தியமான பாவ சந்தோஷங்களை விட்டார்

பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுக்கும் இரண்டாவது பாடம் "கிறிஸ்துவினிமித்தம் வரும் பலனுக்காகவும், நிந்தைக் காகவும் மோசே அநித்தியமான பாவ சந்தோஷங்களை வெறுத் தான்". மோசே சிறுவயதிலேயே செல்லுஞ் செலவைக் கணக்கு பார்க்கிறவராக இருந்திருக்கிறார் (லூக். 4:28) அவர் பாவமானது கொஞ்ச நேர சந்தோஷத்தை தரக்கூடியதென்றும், அதில் உண்மையான மகிழ்ச்சி நீடித்திருக்காது என்பதையும் அறிந்தி ருந்தார். தற்காலிகமான சந்தோஷத்திற்கும், நிலைத்திருக்கும் திருப்திக்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. மோசே தன்னுடைய இளம் வயதிலேயே சரீரப்பிரகாரமான காரியங் களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மாறாக, ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். நாம் இப்போது வாழ்கின்ற உலகில் பொதுவாக வாலிப வயதைக் கடந்து முதிர்வயதை அடைந்தவர்கள் தான் ஆண்டு அனுபவித்த பிறகு உலக வாழ்க்கை வெறுத்து ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அநித்தியமான பாவ சந்தோஷங்களை நாடி அதை அடைவதற்காகப் பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய வாலிப சமுதாயத்தில் பாவம் தேவனுக்கும், தனக்கும் பிரிவினையை உண்டாக்கி விடும் (ஏசாயா 59:2) என்பதை அறிந்து அநித்தியமான பாவ சந்தோஷங் களிலிருந்து தன்னை விலக்கிக் காத்துக் கொண்டார். அப்படி விலக்கிக் காத்துக்கொண்டதோடு அவர் விட்டுவிடவில்லை, கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணியிருக்கிறார், "நிந்தை" என்கிற வார்த்தை எபிரெய கிறிஸ்தவர்கள் முதல் நூற்றாண்டில் பட்ட வேதனைகளை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. பின்பு இதே வார்த்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பட்டபாடுகளை விளக்கும் வார்த்தையாக பயன்படுத்தப்பட்டது (எபி. 13:13). இஸ்ரவேல் ஜனங்களை சீனாய் வனாந்தரத்தின் வழியாய் வழி நடத்தும் போது தனக்கும் அதேவிதமான நிந்தை ஏற்பட்டாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்

தனத்திலிருந்து விடுவிக்கும் தேவனுடைய திட்டத்தில் தான் ஒரு கருவியாகப் பயன்படவே விரும்பினார்.

மோசே தேவனுடைய திட்டத்தை செயல்படுத்துவதற்காக விட்ட பொக்கிஷங்கள் நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாதவைகள். 1920களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் "Howard Carter" என்பவர் ஓர் இளம் எகிப்திய அரசனுடைய கல்லறையைத் தோண்டினார். அதிலிருந்த ஒரு அறையில் அவர் கண்ட தங்கப் புதையல்கள் அவருடைய இரத்தத்தை உறையச் செய்து விட்டது. ஒரு பிரபலமாகாத ராஜாவினிடத்திலே அத்தனை தங்கப் புதையல்கள் இருக்கும்போது, பார்வோன் எகிப்தின் மிகப் புகழ் வாய்ந்த ராஜா. அவனுடைய குமாரத்தியினிடத்தில் பொக்கிஷங்களுக்குப் பஞ்சமே இருந்திருக்காது. அத்தகைய பொக்கிஷங்களை விட்டுவிட்டு மோசே தெய்வீகப் பொக்கிஷங்களை நாடியிருக்கிறார் என்றால் அவர் எப்படிப் பட்ட பண்புகளை தன் வாலிப வயதில் பெற்றிருந்தார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியாது.

பிரியமான வாலிப உள்ளங்களே! மோசே தன்னுடைய வாலிப வயதில் உலகத்தின் ஆசாபாசங்களுக்கு இடங்கொடாமல் தேவனுக்காக, தேவனுடைய ஜனங்களுக்காக தன்னை அர்ப்பணித்த மோசே, வாலிபர்களாகிய நம் யாவருக்கும் சிறந்த முன் உதாரணமாகத் திகழ்கிறார். அவர் மூலமாக நாம் கற்றுக் கொண்ட பாடங்களை நம் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி அநேக வாலிபர்களை ஆண்டவருக்காக ஆதாயப்படுத்துவோம். வாலிப நாட்களில் பொருள் சேர்ப்பதிலும், உலகப்பிரகாரமான ஆசைகளை நிறைவேற்றுவதில் நாட்களை வீணடிக்கும் வாலிபர்கள் இனியாவது மனந்திருந்தி, மனந்திரும்பி நமக்காக சிலுவையில் தம் ஜீவனை விட்ட இயேசுவுக்காய் வாழ வேண்டுமென்பது இந்த கட்டுரையின் நோக்கமாயிருக்கிறது, இந்த நோக்கம் நிறைவேற தேவன் தாமே உதவிச் செய்வாராக! ஆமென். ☆

## நாளும், நடப்பும்

1. 9 சதவீத பொருளாதார வளர்ச்சியே இலக்கு - மத்திய அரசு
2. தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் அமைப்பது அவசியம்
   - குடியரசுத் தலைவர்
3. ஜூன் முதல் மின்வெட்டு படிப்படியாக நீக்கப்படும் - தமிழக அமைச்சர்
4. நிதி ஒதுக்கீடுகளில் தமிழகம் ஒதுக்கப்படவில்லை - மத்திய அமைச்சர்
5. தேர்தல் தோல்விக்கு நானே பொறுப்பு - ராகுல்
6. ஆசியக் கோப்பைக் கிரிக்கெட் இந்திய அணிக்குச் சவாலாக அமைந்துள்ள.




# வனாந்திரத்தில் ஒரு விசித்திர மனிதன்

**Bro. ABEL R. NAYAGAM**

**அ**ன்புத் தம்பிகளே, முழு ஆண்டுத் தேர்வை எழுதும் வேளையில் இருக்கும் உங்களுக்கு, “ஆல் தி பெஸ்ட்” கூறிக் கொள்கிறேன். குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும், ஜெயமோ கர்த்தரால் வரும் (நீதி. 21:31). எனவே, பிரயாசம் உங்க ளுடையது. ஜெயம் கர்த்தருடையது. ஜெபத்துடன் படித்து, தேர்வு எழுதுங்கள்.

சரி, இம்மாதம் புதிய ஏற்பாட்டின் புஸ்தகத்திலே முதல் முக்கிய பாத்திரமாக வரும் மனிதராகிய யோவான் பற்றி படிப் போம். இவர் ஆசாரிய ஊழியம் செய்தவரும், வயது சென்ற வருமாகிய சகரியாவுக்கும், அவன் மனைவியாகிய எலிச பெத்துக்கும் பிள்ளையாக பிறந்தவர். வரப்போகிற மேசியாவுக் காக இந்த உலகத்தை ஆயத்தப்படுத்தும் வேலையைச் செய்பவ னாக இருப்பான் என்று தூதனாகிய காபிரியேல் மூலம் உரைக் கப்பட்டவன் (லூக். 1:13- 17). அதன்படி ஆண்பிள்ளை பிறந்த வுடன், அவனுடைய தந்தை, தேவன் கட்டளையிட்டபடியே அவனுக்கு யோவான் என்று பெயரிட்டான்.

இந்தப் பிள்ளையாகிய யோவான் பெரியவனான பின்பு தான் பிறந்த ஊரை விட்டு யூதேயாவின் வனாந்திரத்திலும், யோர் தான் நதியின் சமவெளிகளிலும் வந்து வாழ்ந்தான். அங்கே, அவன் தன் முழு நேரத்தையும், யாரையெல்லாம் சந்தித்தானோ அவர்களுக்கெல்லாம் போதிப்பதிலேயே செலவழித்தான். அநேகர் அந்த வனாந்தரத்திற்கு வந்து அவன் பிரசங்கிப்பதை கேட்டார் கள். மேசியா சீக்கிரம் வரப்போகிறார், ஆயத்தமாயிருங்கள், அப்போதுதான் தேவன் உங்களை ஏற்றுக் கொள்வார் என்று பிரசங்கித்தான். பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்புங்கள் (மத். 3:6) என்று கூறினான். மேலும், யோவான் அவர்களிடம் மனந்திரும்புதலுக்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றும் பிரசங்கித்தான். எனவே தான், இவன் “யோவான் ஸ்நானகன்” என்று அழைக்கப்பட்டார்.

இந்த யோவான் ஒரு நல்ல வசதியான வீட்டில் வாழ வில்லை. அழகான உடைகளை அணிந்து கொள்ளவில்லை. ஒவ்வொரு நாளும் உயர்ந்த வகை உணவையும் உண்ண

வில்லை. இவன் ஒட்டக மயிர் உடையை தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டிருந்தான். வெட்டுக்கிளியும், காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது (மத். 3:4). வெட்டுக்கிளி, காட்டுத்தேன் ஐயோ, நினைத்தாலே நமக்கு அது ஒரு பயங்கரமான உணவாகத் தெரிகிறது. ஆனால், வேதாகமக் காலத்திலே பாலஸ்தீனாவில் வாழ்ந்த மக்கள் இதை உண்ணும் பழக்கம் கொண்டிருந்தார்கள். சொல்லப்போனால், இன்றைக்கும் கூட மத்திய கிழக்கு நாடுகளில் இதை உண்ணும் பழக்கம் இருக்கிறது.



அன்பு தம்பி, தங்கைகளே இந்த யோவான் ஒரு விசித்திர மனிதன் தான். அவன் உடுத்திய உடை விசித்திரம், உண்ட உணவு விசித்திரம், தங்கிய இடம் விசித்திரம், வேதாகமம் இவைகளைப் பற்றி சொல்லியிருப்பதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது. யோவான் ஒரு தனித்தன்மை வாய்ந்தவன் என்பதற்கு எந்த சந்தேகமுமில்லை. ஒரு விசேஷித்த வேலையைச் செய்வதற்காக, தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவன்.

இதைப் படிக்கும் நாமும் கூட தேவனால் சிருஷ்டிக்கப் பட்டவர்கள். தேவனுடைய வேலையைச் செய்ய வேண்டுமானால் நாம் சில கட்டுப்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டும். இந்தச் சிறுவயதில் இருந்தே உணவு, உடை, இருப்பிடம் மூன்றிலும் நாம் தனித்துவம் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். எளிமையை கடைபிடிக்க வேண்டும். நல்ல வேலையை செய்வதில் முனைப் புள்ளவர்களாக இருக்க வேண்டும். விசித்திர மனிதனாகிய யோவானைப் போல நாமும் ஆயத்தமாக வேண்டும், மற்றவர் களையும் ஆயத்தப்படுத்த வேண்டும். அப்படிச் செய்வோமா?.

# பாடம் - 11 சபையின் ஒழுங்கு நடவடிக்கை

Bro. K. பாஸ்கர்

அன்பான வாசகர்களுக்கு,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். நாம் இந்த தொடர் கட்டுரையின் மூலமாக வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொண்டு வருகிறோம். வசனத்தின்படி செயல் படாத சபைகளை இயேசு கிறிஸ்து கட்ட வில்லை என்பதையும் அறிந்து கொண்டு வருகின்றோம். இந்த மாதத்திலும் இந்தத் தொடரில் சபையின் ஒழுங்கு நடவடிக்கை என்ற பாடத்தின் மூலமாக கிறிஸ்து கட்டிய சபையை அறிந்து கொள்வோமாக!

## I. ஒழுங்கு நடவடிக்கை என்றால் என்ன?

இயேசு கிறிஸ்து கட்டிய சபையானது ஒழுங்குடன் செயல் பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது (1கொரி. 14:40). எனவே, சபையிலுள்ள ஒவ்வொருவரும் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு ஒரே சிந்தையாயிருக்க வேண்டும் (பிலி. 3:16) ஏனென்றால், கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் உறுதி இதிலே விளங்குகிறது. (கொலோ. 2:5) சபையிலுள்ள ஒவ்வொரு வரும் விஷ ஊசிகளாக மாறாமல் விசுவாசிகளாக நடந்து கொண்டு தேவன் நியமித்திருக்கும் சபை வழி நடத்துனர் ஊழியருக்குக் கீழ்ப்படிந்து அடங்குகிறவர்களாக இருக்க வேண்டும் (எபி. 13:17).

ஒழுங்கு, ஒழுக்கம் என்பது இயேசு கிறிஸ்துவைப் பின் பற்றும் நம்மிடத்திலே காணப்படவேண்டும். ஏனென்றால், நாம் குருவாக ஏற்றுக்கொண்டு அவருடைய சீஷர்களாக இருக்கின் றோம். சீஷர் என்ற ஆங்கில வார்த்தைக்கும், ஒழுங்கு, ஒழுக்கம் என்ற ஆங்கில வார்த்தைக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை என்பதைக் கவனிக்கவும் (சீஷர், ஒழுக்கம், ஒழுங்கு) எனவே, இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் இந்த வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து வாழ்வது மிகவும் அவசியமாக உள்ளது.

நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன் நம்முடைய ஜீவியம் ஒழுக்கமில்லாமல் இருந்தது. அதாவது, வேசித்தனம், விக்கிரகாராதனை, விபச்சாரம், சுயபுணர்ச்சி, ஆண் புணர்ச்சி, திருடர், பொருளாசை, வெறியர், உதாசீனர், மற்றும் கொள்ளை போன்ற ஒழுக்கங் கெட்ட நடத்தையுடையவர்களாக வாழ்ந்து வந்தோம்! அதிலிருந்து இயேசு கிறிஸ்துவை

விசுவாசித்து, பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பி, அறிக்கையிட்டு ஞானஸ்நானத்தினாலே கழுவப்பட்டோம். பரிசுத்தமாக்கப்பட்டோம், நீதிமான்களாக்கப்பட்டோம் (1கொரி. 6:11) ஒழுக்கமுள்ள வாழ்க்கையை தேவனாலே பெற்றுக் கொண்டோம். இவ்வாறு நம்முடைய வாழ்க்கை சீர்திருத்தலுடன் இருக்கும்பொழுது மீண்டுமாக அந்தப் பாவ வாழ்க்கைக்குத் திரும்பும் போது நம்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படியாக இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார் (மத். 18:15-17) இதுதான் ஒழுங்கு நடவடிக்கை என்பது.

## II. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் முறை

சபையில் ஒழுங்கற்றுத் திரிகிறவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி அந்தந்த சபையின் வழிநடத்துனர்களுக்கு இயேசு கிறிஸ்து அதிகாரம் கொடுத்திருக்கின்றார். அதன் முறையைக் கவனியுங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால் அவனிடத்தில் போய் நீயும், அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து (இது முதல் படி). அவன் உனக்கு செவி கொடுத்தால் உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய் அவன் செவி கொடாமற் போனால் இரண்டு, மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலவரப்படும்படி இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக் கொண்டு போ (இது இரண்டாம்படி). அவர்களுக்கும் அவன் செவி கொடாமற்போனால் அதை சபைக்குத் தெரியப்படுத்து. (இது மூன்றாம், கடைசி முயற்சி) இந்த மூன்று முயற்சிகளுக்கும் அவன் செவி கொடாமற் போனால் அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும், ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக என்றார். அதாவது, கிறிஸ்தவரல்லாதவர் போல இருப்பானாக என்பது அர்த்தமாகும் (மத். 18:15-17) இதைச் செய்வதற்கு தலைமை இடமோ, உதவித் தொகை கொடுக்கும் ஒரு துறைக்கோ அதிகாரமில்லை அந்தந்த உள்ளூர் சபையைக் கவனித்துக் கொண்டிருக்கும் சபை வழிநடத்துனர்களுக்கே முழு அதிகாரம் உண்டு (1 கொரி. 5:1-5) அதாவது சபை ஊழியர்களுக்கே முழு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது (1 தீமோ. 5:21)

சபையில் மூப்பர்களை ஏற்படுத்தும் அதிகாரம் ஊழியக்காரருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தவறு செய்யும் போது ஊழியர் தான் தீர்க்க வேண்டும். (1 தீமோ. 5:19-21) இப்படியிருக்கிறபடியால் ஊழியக்காரர் மற்றவர்கள் பாவத்திற்கு உடன்படாமல் தன்னை சுத்தவானாகக் காத்துக் கொள்ள வேண்டும் (1 தீமோ. 5:22) உள்ளூர் சபையின் ஊழியர் தான் வழி நடத்தும் சபையில் சிலரை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்போது மற்ற ஊழிய சகோதரர்கள் அதை அலட்சியம் செய்து சபையின்

ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட்டவர்களை ஆதரித்து உதவிகளைச் செய்வது என்பது தேவனுடைய கட்டளையை மீறும்படியாக இருக்கின்றது (2 தெச. 3:8)

## III. ஒழுங்கு நடவடிக்கையின் பலன்

சபையில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தால் சபை வளராது அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைந்து விடும் என்று நினைத்து அநேக ஊழிய சகோதரர்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில்லை. மாறாக, தவறோடு ஒத்துப்போய் விடுகிறார்கள். ஆனால், தேவன் அப்படி நினைப்பதில்லை என்று நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும் (ஏசா. 55:8,9).

சபை ஆரம்பிக்கப்பட்டு குறைந்த நாட்களில் நடந்த ஒரு சம்பவத்தை கவனியுங்கள். விசுவாசிகள் அப்போது இருந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தங்கள் நிலங்களையும், வீடுகளையும் விற்று அதின் கிரயத்தை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள் (அப். 4:34,35) அப்பொழுது அனனியா, சப்பீராள் என்ற கணவன், மனைவியும் தங்கள் காணியாட்சியை விற்று ஒரு பங்கை வஞ்சித்து வைத்து ஒரு பங்கைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்து இவ்வளவுக்குத் தான் விற்றது என்று ஆவியானவரிடத்தில் பொய் சொன்னார்கள். அப்போது அப்போஸ்தலனாகிய பேதுரு அவர்களுடைய பொய், பித்தலாட்டத்தை அறிந்து அவர்களைச் சபித்தார் உடனே அவர்கள் மரித்துப் போனார்கள். இதைக் கேள்விப்பட்ட சபை யாருக்கு பயம் உண்டானது. அப்போஸ்தலரால் செய்யப்பட்ட அற்புத அடையாளம், உபதேசம் இவைகளைக் கண்டு ஆவிக் குரிய வளர்ச்சியில் மேன்மை அடைந்தனர், திரளான புருஷர் களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடம் அதிக மதிகமாய் சேர்க்கப்பட்டார்கள் (அப். 5:1-11) இந்த ஒழுங்கு நடவடிக்கையினால் சபையானது ஆவிக்குரிய பக்தியிலும், எண்ணிக்கையிலும் வளர்ந்தது! இன்று நாம் ஏன் வேறுவிதமாய் சிந்திக்க வேண்டும்! என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒழுங்கு நடவடிக்கையால் பாவம் செய்த சகோதரனோ, சகோதரியோ தன் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பும்படியாக இருக்கிறது (2 கொரி. 2:5-7) மேலும் சரீர ஒழுக்கக்கேடாக நடந்து கொண்டிருப்பவர்களிடமிருந்து சபை காப்பாற்றப்படுகின்றது (1 கொரி. 5:1-13) சபையின் பரிசுத்தம் காக்கப்படுகிறது (எபே. 5:27) பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவரி டத்திலிருந்து சபை பாதுகாக்கப்படுகின்றது (ரோமர் 16:17,18) கிறிஸ்துவின் உபதேசம் நிலைநாட்டப்படுகின்றது. (2 யோவான் 9-11).

# கர்த்தருடைய சேனை

## *Bro. L.E. Cranford*

வேத வகுப்புகளிலும், விடுமுறை வேதாகமப் பள்ளியிலும், சிறு குழந்தைகள் " நான் கர்த்தருடைய சேனையில் இருக்கிறேன்" என்று பாட நம்மில் அநேகர் கேட்டிருக்கிறோம். அவர்களில் பெரும்பாலானோருக்கு அந்தப் பாடலின் பொருள் தெரியாது என்று எண்ணுகிறேன். நடுத்தர வயதினரில் அநேகரும், கிறிஸ்தவர்களாயிருக்கிற அநேக பெரியவர்களுக்கும், நடுத்தர வயதினருக்கும் கூட கர்த்தருடைய சேனை என்பதற் கான பொருள் தெரியுமா என்று திட்டமாகச் சொல்ல முடியாது.

கர்த்தருக்கு ஒரு சேனை இருக்கிறது என்பதற்கான சில ஆதாரங்களை பின்வரும் வசனங்கள் கொடுக்கின்றன.

ரோமர் நிருபத்தின் ஆசிரியர் இவ்விதமாகச் சொல் கிறார். " *இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகை யால், அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்* " (ரோமர் 13:12).

"ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் " (எபே. 6:13).

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதும் போது, "நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவக னாய்த் தீங்கநுபவி " என்று எழுதுகிறார் (II தீமோ. 2:3).

" தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவக மெழுதி கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான் " (II தீமோ. 2:4).

கிறிஸ்துவின் போர்ச் சேவகனாக ஒரு கிறிஸ்தவனின் சர்வாயுத வர்க்கம் இதோ: "*சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்க வசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாச மென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்*" (எபே. 6:1417).

கர்த்தருக்கு ஒரு சேனை உண்டு என்பதை ஒத்துக் கொண்டு ஒரு நாட்டிலுள்ள ராணுவத்தின் சில தன்மைகளை கவனிப்பது பிரயோஜனமாயிருக்கும்.

நான் இரண்டாம் உலகப் போரின் போது விமானப்படையில் பணியாற்றினேன். அதில் சேர்ந்த பிறகு, நான் விரும்பியபடி எதையும் செய்ய முடியவில்லை. எனக்கு யாரும் வாழ்த்துதல் சொல்லவில்லை, நான் அவர்களுடன் இருந்ததினால் அவர் களுக்கு மகிழ்ச்சி தான் என்றும் அவர்கள் சொல்லவில்லை.

ராணுவ அதிகாரி என்னை ஒரு குறிப்பிட்ட பிரிவில் சேர்த்தார். நான் செய்யும்படியாக சில பணிகள் எனக்குக் கொடுக்கப்பட்டது. எனக்கு மேலாக சில குறிப்பிட்ட அதிகாரிகள் இருந்தார்கள். சில விமானங்களை வரிசைப்படுத்தி ஒழுங்கு படுத்துவதற்கு நான் ஆஜராகும்படி கட்டளையிடப்பட்டிருந் தேன். நான் சரியான நேரத்தில் அந்த இடத்தில் இருப்பது முற்றிலும் அவசியமாகக் காணப்பட்டது. அங்கே ஆஜராகாம லிருப்பதற்கு எந்த ஒரு சாக்குபோக்கும் ஏற்றுக் கொள்ளப்படாது. “எனக்கு வேறு வேலை இருந்தது என்றோ, என்னால் எழுந்திருக்க முடியவில்லை” என்று யாரும் சொல்லத் துணியவில்லை.

எங்கள் பயிற்சி முடிந்தவுடன், மறுபடியும் சில குறிப் பிட்ட பணி ஸ்தலங்களுக்குச் செல்ல நாங்கள் பணிக்கப்பட் டோம். அங்கே நாங்கள் செய்யும்படியாக வேலை நிச்சய மாகக் கொடுக்கப்பட்டது.

ஒரு வேலை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக அதில் பங்கேற்கிறவர்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்று அறிவுரை வழங்கப்படும். ஒவ்வொருவரும் அவரவர் இடத்தையும், பொறுப்பையும் அறிந்திருந்தார்கள். வேலையை முடித்து விட்டு திரும்புபவர்கள் தாங்கள் பணி செய்த விதம் பற்றிச் சொல்ல வேண்டும். இது தான் ராணுவத்தின் முறை.

சபை கர்த்தருடைய சேனையாக இருக்கிறபடியால் இந்த இரு அமைப்புகளிலும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்ந்தால் பிரயோஜனமுள்ளதாயிருக்கும்.

சில சபைகள் மற்ற சபைகளை விட ஆளுகை அமைப்பில் சிறந்து விளங்கும். இது நமக்கு புதிய செய்தி அல்ல. ஆயினும், புதிதாக சபைக்கு வருபவர்களுக்கு குறிப்பிட்ட வாரங்கள் பயிற்சி கொடுக்கும் சபையை எனக்குத் தெரியாது; அது போல அதன் அங்கத்தினர்கள் எப்போதும் எங்கே இருக்கிறார்கள் என்பதை அறியும் அல்லது ஒவ்வொரு கூட்டத்திலும் அதில் பணிபுரியும் எல்லோரையும் வரக் கட்டளையிடும் சபை எனக்குத் தெரியாது.

சில சபைகளில் ஞாயிறு காலை ஆராதனையை நடத்து பவர்கள் ஆராதனை ஆரம்பிப்பதற்கு முன்பாக ஜெபத்திற்கு கூடுவதை நான் அறிவேன். ஆனால், செய்த பணியைக் குறித்து விவரிக்கக் கூடிய சூழ்நிலையை அவர்களிடத்தில் நான் பார்த்த அனுபவமில்லை அல்லது அப்படிச் செய்கிற வேறு சபையைப் பற்றி எனக்குத் தெரியாது.

பொதுவாக ராணுவத்தில், ஒவ்வொரு வீரருக்கும் ஒரு பிரிவின் கீழ் செய்யும்படியாக வேலை கொடுக்கப்படும், ஒவ்வொருவரும் தங்கள் வேலையை அறிவார்கள். அது போலவே கர்த்தருடைய சேனையில் இருக்கும் ஒவ்வொரு வருக்கும் செய்யும்படியாக வேலை கொடுக்கப்பட வேண்டும்.

சபையின் அங்கத்தினர்கள் (கர்த்தருடைய சேனை) கர்த்தருடைய நாளில் அவர்களுடைய சௌகரியம் போல் சபை கூடி வந்தாலோ அல்லது சபை கூடி வருதலை விட்டு விட்டாலோ அதற்குண்டான விளைவுகள் இல்லையென்றால் ஏதோ தவறு நடக்கிறது.

அநேக ஞாயிற்றுக்கிழமை களில் ஆராதனையை தவற விட்ட அங்கத்தினர்களை நான் அறிவேன், அவர்கள் திரும்பி வந்த போது "நாங்கள் உங்களை காணத் தவறிவிட்டோம், நீங்கள் திரும்பி வந்ததினால் மகிழ்ச்சி அடைகிறோம் என்று வாழ்த்தப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நடத்தைகள் ராணுவத்தில் பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது. அதுபோல ஒரு நாளில் கர்த்தர் நம் சாக்குப் போக்குகளை ஏற்றுக்கொள்ளமாட்டார் ".


கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு மூப்பர் ஓர் இளம் பெண்ணைப் பார்த்து இப்படிச் சொன்னார் "கடந்த வாரம் உன்னைக் காணத் தவறிவிட்டோம்" அதற்கு அந்தப் பெண் பதிலாக " நான் வேலைச் செய்ய வேண்டியதாயிருந்தது" என்று சொன்னாள். அதற்கு அந்த மூப்பர் "நான் உன்னைக் காண தவறி விட்டேன் என்று உனக்குத் தெரிவிக்க விரும்பினேன்" என்று சொன்னார்.

அந்த இளம் பெண் கர்த்தருடைய கட்டளைக்கேற்ப மற்ற கிறிஸ்தவர்களோடு சபை கூடுதலைக் குறித்து ஜாக்கிரதையாக இல்லாமல் இருந்திருக்கலாம். கர்த்தருடைய கட்டளை "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்பதாகும். இதை சிலர் செய்கிறார்கள், சிலர் செய்வதில்லை.

ராணுவத்தில் ஒன்று கூடுவதற்கு தவறினால் அது எந்த வகையிலும் " ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது "!.

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

<u>பேச்சாளர்</u> : **சகோ. பிலேமோன் ராஜா**, மதுரை.

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை TV | சனி | காலை | 5:30 | மணி |
| தமிழன் TV | ஞாயிறு | இரவு | 10:00 | மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

<u>பேச்சாளர்</u> : **சகோ. அர்ச்சுனன்**, வத்தலக்குண்டு.


| | | | |
|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை 6:00 மணி | |
| தமிழன் TV | சனி | காலை 6:15 மணி | |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday to Friday | 5.30 - 5.45 | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Sunday Thursday Friday | 6.45 - 7.00 p.m. 5.45 - 6.00 p.m. 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 4766/87- Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014




( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )


## திருமறை தியானம்


### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| **பொதிகை TV** | ஞாயிறு | காலை | 5:30 | மணி |
| **தமிழன் TV** | திங்கள் | காலை | 7:00 | மணி |
| **தமிழன் TV** | சனி | காலை | 7:15 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

**கீழ் காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**









## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.